திரு. கே. ராஜாராம்: ஆமாம்; தேவையில்லை.

திரு. க. அறிவழகன்: ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: நான் திருத்தத்தைப் பிரேரேபிக்கவேயில்லை.

திரு. க. அறிவழகன்: இதற்கு முன்னால் சொசைட்டி ஆக்டிலே ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, 10,000 ரூபாய் வருமானம் வராத, 20 உறுப்பினர்களும் இல்லாத சொசைட்டிகள் இருந்தால் அதனுடைய கதி என்னவாகுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: விதிகளைப் படித்துப் பார்க்க வேண்டும்.

பிரிவுகள் 12 முதல் 58 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,
"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை.—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 7-20)

(3) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன் வடிவு எண் 51/1974)

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,
"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகின்றேன்.

@199-200 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது

தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவேட்டுச் சட்டம் [தமிழ்நாடு சட்டம் 10/1969], இம்மாநிலத்தில் உள்ள வேளாண்மை நிலங்கள் குறித்த குத்தகை உரிமைகள் பதிவேட்டைத் தயாரித்து வைத்து வர வகை செய்கிறது. மேற்படி சட்டத்தின் இரண்டாவது பிரிவைச் சார்ந்த [8] பகுதியில் கண்ட (ஏ) உட்பகுதி, தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைக்காரர்கள் பாது காப்புச் சட்டம் 25/1955 பொருந்துகிற ஒரு நிலத்தைப் பொறுத்தவரையில் "குத்தகைக்காரர்" என்ற சொல்லுக்கு, 1955-ஆம் ஆண்டு 2-வது பிரிவைச் சார்ந்த (ஏஏ) பகுதியில் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ள பயிரிடு குத்தகைதாரர் ஒருவர் என்று பொருள் கூறுகிறது. ஆனால் தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு 25—ஆம் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயலில் இல்லை. தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10வது சட்டத்தில் குத்தகைக்காரர் என்ற சொல்லுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மேற்படி பொருள் விளக்கத்தை மேற்படி மாவட்டத்திற்குப் பொருந்துமாறு செய்ய தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2-வது பிரிவைச் சேர்ந்த (8)-வது பகுதியில் கண்ட (ஏ) உட்பகுதியில் குறிப்பிட்டுள்ள வகையான பயிரிடு குத்தகைக்காரர் மேற்படி மாவட்டத்தில் இருக்கமாட்டார்கள் என்பதாலும், அத்தகைய குத்தகைக்காரர்கள் குறித்த குத்தகை உரிமைகளை எழுதி வைக்க இயலாது. தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2 (8) பிரிவு பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ள படி மேற்படி மாவட்டத்தில் குத்தகைக்காரர் எவரும் இல்லை என்ற காரணத்தால், அச்சட்டத்தின் செல்திறன்கூட 1974-ஆம் ஆண்டு 538-வது ரிட் மனுவில் ஆட்சேபிக்கப்பட்டது. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பயிரிடு குத்தகைக்காரர்கள் தங்களது குத்தகை உரிமைகள் குறித்து நிலையானதும் அதிகார பூர்வமானதுமான பதிவேட்டைப் பெறும் நல்வாய்ப்பை இழக்கும் நிலையில் உள்ளனர். அத்தகைய பதிவேடுகள் இருந்தால், அவை நிலச் சொந்தக்காரர்கள் அவர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில், மனம் போன போக்கில் நடந்துகொள்வதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்; அத்துடன் உரிமையில் வழக்குகளில் அந்த பதிவேடுகள் அவர்களுக்கு உறுதுணையாக விளங்கும். எனவே, தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு 25-வது சட்டத்தில் உள்ளது போலவே "பயிரிடு குத்தகைக்காரர்" என்ற சொற்கள் பொருள் விளக்கத்தை அமைத்துக்கொள்ளும் வகையில் தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 2 (8) பிரிவைத் திருத்துவதெனவும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட சொற்களையும், நடவடிக்கைகளையும் செல்திறன் உடையனவாக ஆக்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலவை இதனை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்): அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

1975 ஏப்ரல் 18]

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1974) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. எஸ். டி. ஆதித்தன்) : அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1974) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள் சிறு இனாம் கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1974).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள்-சிறு இனாம்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 61/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மேற்சொன்ன சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட நடுவர்மன்றம் ஒவ்வொன்றும் வழக்கு ஒன்றை அல்லது மேல் முறையீடு ஒன்றை விசாரணை செய்யும்போது 1908-ஆம் ஆண்டு சிவில் நடைமுறை விதிக்கோவையின் கீழ் (மத்தியச் சட்டம் 5/1908) சிவில் நீதி மன்றம் ஒன்றில் நிலை

@ 201–204 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப் பட்டுள்ளது.